## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வெலிகந்த பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31ல் உள்ளவாறான சொத்துக்கள் பெறுப்புக்கள் பற்றிய கூற்று, தேறிய சொத்துக்கள் /உரிமை மூலதனம் மாற்றமடைதல் பற்றிய கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் அளவு ரீதியான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு ஏற்புடைய தகவல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்கள் தொடர்பான குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது உத்தரவின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரை மற்றும் அவதானிப்புக்கள் இவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவ் அறிக்கையின் 1.6 ஆம் பந்தி வரையான விடயங்களின் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்கள் மூலம் 2023 திசெம்பர் 31ல் உள்ளவாறான வெலிகந்த பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அதன் நிதிச் செயலாற்றுகை, காசுப்பாய்ச்சல் ஆகியன உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பில் இலங்கையின் அரச துறையின் கணக்கீட்டு தரநியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையினைப் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது கருத்து முனைப்பழியாக்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) அமைவாக என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளது. எனது கருத்துக்கான அடிப்படையினை வழங்குவதற்காக என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சாட்சியங்கள் போதுமானதும் பொருத்தமானதும் ஆகும் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அது தொடர்பாக நிர்வகிக்கும் தரப்பினர்களதும் பொறுப்பு

இந்த நிதிக் கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பில் இலங்கையின் அரச துறையின் கணக்கீட்டு தரநியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் நியாமானதுமான நிலைமையினைப் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்பட முடியுமான பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்வதற்கு இயலுமானவாறு தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஆகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு நிர்வகிக்கும் தரப்பினர்களுக்கு உரியதாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் நடைமுறை நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க முடியுமானவாறு

தனது வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடய எல்லை (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஓட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் அளவு ரீதியான பொய்யான கூற்றுக்கள் அற்றவை என நியாயமான ஓர் உறுதிப்பாட்டினை வழங்குதல் மற்றும் எனது கருத்து உள்ளடங்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தொகுக்கப்பட்ட அறிக்கையினை வெளியிடல் எனது நோக்கம் ஆகும். நியாயமான உறுதிப்பாடு உயர்வான தரத்தினைக் கொண்ட ஓர் உறுதிப்பாடாக அமைகின்ற போதும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்ற உறுதிப்பாடாக அமைய மாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனி அல்லது கூட்டு விளைவின் காரணமாக பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்படக் கூடும் என்பதுடன் இந் நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அதனைப் பயன்படுத்துபவர்களினால் பொருளாதாரத் தீர்மானங்கள் எடுக்கப்படும் போது அது தொடர்பாக கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் தீர்ப்பு மற்றும் தொழில்சார் சந்தேகக் கண்ணோட்டத்தில் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களின் அபாயங்களை அடையாளம் காணும் போது மற்றும் மதிப்பீடு செய்யும் போது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் அபாயத்தினைக் குறைப்பதற்குப் போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சாட்சியங்களைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாக உள்ளது. பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்தினை விடவும் மோசடி காரணமாக பாரிய தாக்கம் ஏற்படும் என்பதுடன் தவறான செயற்பாடு, போலி ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்றே வழிவிடுதல், அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளை வழிவிடுதல் ஆகியன மோசடிகள் நிகழ்வதற்கான காரணங்கள் ஆகும்.

- சந்தர்ப்பத்திற்கு ஏற்ற கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக இல்லாத போதும், சந்தர்ப்பத்திற்கு ஏற்ற கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு நியமங்களின் பொருத்தப்பாடு கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட ஏற்புடைய வெளிக்கொணர்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டது.

- ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது நிதிக் கூற்றுக்களின் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாய் அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமானவாறு உள்ளக்கப்பட்டுள்ளதென மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரை மற்றும் தேவையான எச்சந்தர்ப்பத்திலும் பின்வரும் விடயங்கள் பற்றிப் பரிசோதிப்பதற்காக கணக்காய்வு விடய எல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது பிரதேச சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்வதற்கு இயலுமானவாறு அதன் ஒழுங்கமைப்பு, முறைமை, நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் அளவு ரீதியாகவும் திட்டமிடப்பட்டுள்ளதா என்பது பற்றி மற்றும் குறித்த முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணப்பட்டு வருகின்றனவா என்பது பற்றி;

- ஏற்புடைய எழுதப்பட்ட சட்டம் அல்லது பிரதேச சபையால் வெளியிடப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட உத்தரவுகளுக்கு அமைவாக பிரதேச சபை செயற்பட்டுள்ளதென,
- தனது அதிகாரங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொண்டுள்ளதென,
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாக மற்றும் பயனுள்ளவாறு கால வரையறைக்குள் மற்றும் ஏற்புடைய சட்டவிதிகளுக்கு அமைவாக பெறுகைச் செயன்முறை மேற்கொண்டு பயன்படுத்தப்பட்டள்ளதென.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கும்.

(அ) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)ஈ (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திசைவாக உள்ளன.

(ஆ) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)ஈ (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் முன்னைய ஆண்டு என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

அனைத்து கணக்கீட்டு குறைபாடுகளையும் இந்த தலைப்பின் கீழ் காட்ட முடியும். உதா:- குறைவாக காட்டுதல், கூடுதலாக காட்டுதல், விடுபடல் போன்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வு ஆண்டுக்கான கட்டிட தேய்வுப் பெறுமதி ரூபா.14,464,174 கணக்குகளில் பதியும் போது ரூபா.9,812,308 எனக் காட்டப்பட்டமை காரணமாக மீளாய்வு ஆண்டில் மிகை மற்றும் கட்டிடங்களின் தேறிய ஏட்டுப் பெறுமதி ரூபா.4,651,866 அதிகமாக காட்டப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டுக்காக சரி செய்யப்பட்டு கணக்குகளில் பதியப்பட்டுள்ளதாக | சரியாக கணக்குகளில் பதியப்பட வேண்டும் |
| (ஆ) | மீளாய்வு ஆண்டுக்கான கணனி மற்றும் உதிரிப் பாகங்களின் தேய்வுப் பெறுமதி ரூபா.761,998 ஆக இருந்த போதும் நிதிக் கூற்றுக்களில் ரூபா.509,731 என ரூபா.252,267 குறைவாக காட்டப்பட்டிருந்தது. | சரி செய்யப்பட்டு கணக்குகளில் பதியப்பட்டுள்ளதாக | சரியாக கணக்குகளில் பதியப்பட வேண்டும் |
| (இ) | பிபிதெமு பொலனறுவை மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2019/2020 ஆம் ஆண்டுகளில் நிர்மாணிப்புக்கள் பூர்த்தி செய்யப்பட்ட 03 | பெறுமதியினை பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் | சொத்துக்களின் பெறுமதியினை இனம் கண்டு கணக்குகளில் |

| | | | |
|---|---|---|---|
| | கட்டிடங்களின் பெறுமதி நிலையான சொத்துக்களின் கீழ் கணக்குகளில் பதியப்படவில்லை. | மேற்கொள்ளப்பட்டுள்ளதாக | பதிதல் வேண்டும். |
| (ஈ) | கைத்தொழில் கடன் பட்டோர் மீதி ரூபா.920,520 கூடுதலாக பதிவு செய்யப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் |

**1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வு ஆண்டின் திசெம்பர் 31 இல் சமர்ப்பிக்கப்பட்ட 02 சொத்து விடயங்களின் பெறுமதி அவற்றுக்கு ஏற்புடைய நிதிக் கூற்றுக்கள் மற்றும் பயன்பாட்டு ஆவணங்களின் பிரகாரம் ரூபா.608,992 இணங்காமல் காணப்பட்டது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகளை சரியாக இணங்கச் செய்தல் வேண்டும் |

**1.6.3 கணக்காய்வுக்கான எழுத்துமூல சான்றுகள் காணப்படாமை**

| விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூ. | | | |
| கைத்தொழில் கடன்படுநர் மீதி | 44,802,479 | மீதியை உறுதி செய்தல் | எதிர்காலத்தில் அந்த ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | மீதிகளை உறுதி செய்தல் மற்றும் உப அட்டவணை சரியாக சமர்ப்பித்தல் வேண்டும். |
| கைத்தொழில் கடன்கொடுநர் மீதி | 45,379,043 | கடன்படுநர் கடன்கொடுநர் இணங்க செய்தல் | | |
| மணல் இறங்குதுறை வருமானம் | 83,100 | வருமான ஆவணம் | | |
| மீள் செலுத்தப்பட வேண்டிய வைப்புகள் | 41,500 | உப அட்டவணை, இற்றைப்படுத்தப்பட்ட வைப்பு ஆவணம் | வைப்புத் தொகை இரண்டு ஆண்டுகளுக்கு அதிகமானது என்பதால் வருமானத்துக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | உப அட்டவணை சரியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | சட்டங்கள் | | | |
| (i) | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | | | |
| | 219(1) ஆம் பிரிவு | பிரதேச சபைக்குச் சொந்தமான வெலிகந்த புதிய சந்தைக் கட்டடிடத் தொகுதியின் 07 கடை அறைகள் மற்றும் பஸ் நிலைய மேல்மாடி 06 கடை அறைகள் மீளாய்வு ஆண்டில் வாடகைக்கு வழங்கும் போது சபையுடன் தொடர்புடைய தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டது. | உரிய கேள்விப் பத்திர நடைமுறைகளைப் பின்பற்றி சொத்துக்கள் வழங்கப்பட்டுள்ளதாக மற்றும் தற்போது ஏற்புடைய வாடகை உரியவாறு அறவிடப்பட்டு வருவதாக | சட்ட விதிகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | | |
| | XXIV ஆம் அத்தியாயத்தின் 31 ஆம் பிரிவு | சபையின் முன்னாள் செயலாளரால் பொதுச் சபையில் அங்கீகரிக்கப்பட்ட முன்மொழிவு எனக் குறிப்பிட்டு வாராந்த சந்தையை குத்தகைக்கு வழங்குதல் தொடர்பில் போலி ஆவணம் தயாரித்து கணக்காய்வுக்கு சமர்ப்பித்த போதும் இந்த முறைகேடு தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | உள்ளூராட்சி திணைக்களம் மூலம் ஆரம்ப விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளெ தன | சட்ட விதிகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| | நி.பி.103 (1) | 2022 ஒக்டோபர் மாதம் வெளிக்கொணரப்பட்ட வருமான பரிசோதகரின் நிதி மோசடி தொடர்பில் பொலிசுக்கு அறிக்கையிடல், இன்றேல் நட்டங்கள் பற்றிய ஆவணத்தில் அந்த நட்டம் தொடர்பில் பதிவு செய்தல், ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் எதிராக வெவ்வேறாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | உள்ளுராட்சி திணைக்களம் மூலம் ஆரம்ப விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், விசாரணை அறிக்கை கிடைத்த பின்னர் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானங்களை மிகைத்த செலவுகள் ரூபா.17,020,208 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானங்களை மிகைத்த செலவுகள் ரூபா. 6,647,841 ஆக இருந்தது.

குறிப்பு : ரூபா.11,018,800 நீதிமன்ற தண்டப்பண வருமானம் பற்றிய தகவல்கள் கணக்காய்வு திகதிக்கு பின்னர் இனம் காணப்பட்டமையால் வருமானங்களில் உள்ளடக்கப்படவில்லை.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
| | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| (i) | வீதவரியும் வரியும் | 1,335,500 | 1,453,305 | 1,340,835 | 130,720 | 787,400 | 389,400 | 389,400 | - |
| (ii) | வாடகை | 6,298,283 | 6,081,568 | 6,592,378 | 4,061,392 | 8,558,916 | 4,284,700 | 2,534,125 | 5,478,753 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணம் | 579,750 | 151,718 | 140,348 | 786,015 | 488,650 | 189,282 | 189,281 | 774,845 |
| (iv) | ஏனைய வருமானம் | 11,500,000 | 5,847,550 | - | 17,882,951 | 8,544,000 | 11,0 74,183 | 9,300,000 | 12,035,401 |
| | மொத்தம் | 19,713,533 | 13,534,141 | 8,073,561 | 22,861,078 | 18,378,966 | 15,937,565 | 12,415,806 | 18,288,999 |

## 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றுகை

சபையின் வருமானச் சேகரிப்பு செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புகள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வாடகை** | | |
| (i) | மீளாய்வு ஆண்டுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட கடை வாடகை வருமானம் ரூபா.2,109,948 மற்றும் ஆரம்ப நிலுவை ரூபா.3,334,472 என சேகரிப்பதற்கு எதிர்பார்க்கபட்ட ரூபா.5,444,420 வருமானத்தில் மீளாய்வு ஆண்டில் சேகரிக்கப்பட்ட ரூபா.1,519,029 அதாவது 28 சதவீதமாக இருந்தது. | தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக | தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட வேண்டும் |
| (ii) | கடை அறைகளை வாடகைக்கு வழங்குதல் தொடர்பான ஒப்பந்தம் பிரகாரம் குத்தகை வாடகை செலுத்த தவறும் சந்தர்ப்பத்தில் ஒப்பந்தத்தை இரத்துச் செய்யும் மற்றும் குத்தகை ஆதனத்தில் இருந்து குத்தகை கொள்வனவாளரை அகற்றும் உரிமை வாடகை அளிப்புதாரர் தரப்புக்கு உரித்தாக இருந்த போதும் 53 கடை அறைகள் தொடர்பான ரூபா.3,227,687 நிலுவை குத்தகை வாடகை தொடர்பான ஒப்பந்தம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக | தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட வேண்டும் |
| (iii) | வருடாந்த கேள்விப்பத்திரம் மீது குத்தகைக்கு விடயப்படும் ஆதனங்கள் தொடர்பில் மீளாய்வு ஆண்டின் இறுதியில் ரூபா.923,654 நிலுவை காணப்படுவதுடன் அந்த நிலுவை 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கானதாக இருந்த போதும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக | தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட வேண்டும் |
| **(ஆ)** | **அனுமதிப் பத்திர கட்டணம்** | | |
| | மீளாய்வு ஆண்டின் இறுதியில் ரூபா.916,735 நிலுவை வியாபார அனுமதிப் பத்திர வருமானம் காணப்பட்டது. | நிலுவை அனுமதிப் பத்திர கட்டணம் பல ஆண்டுகளாக நிலவி வருவதுடன் அந்த நிலுவைத் தொகையினை பதிவழிப்பதற்கு ஆளுநரின் அனுமதியைப் | நிலுவை வருமானத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|
| | பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | |
| **(இ) ஏனைய வருமானங்கள்** | | |
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2023 திசெம்பர் 31 இல் வருமதியாக இருந்த நீதிமன்ற தண்டப் பணம் ரூபா.13,706,950 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா.4,176,000 இருந்தது. | எதிர்காலத்தில் இது தொடர்பான சரியான தகவல்கள் கிடைத்த பின்னர் கணக்குகளில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சரியான வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகளும் நலன்புரியும் ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **துணைவிதி** | | |
| (i) | பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் துணைவிதிகள் விதிக்கப்பட வேண்டிய கட்டட நிர்மாணிப்பு, பாதைகள் மற்றும் வீதிகள், கழிவுப் பொருட்களை அகற்றுதல், பொழுதுபோக்கு வரி, மணல் போக்குவரத்து ஆகிய 06 பிரதான பணிகள் தொடர்பில் துணைச் சட்டங்கள் விதிக்கப்படவில்லை. | துணைவிதிகளைத் தயாரிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக | துணைவிதிகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | சபையால் தயாரிக்கப்பட்ட வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடங்கும் 17 பிரதான செயற்பாடுகள் தொடர்பில் எதிர்பார்க்கப்பட்ட வருமானம் ரூபா.116,100,000 ஆக இருந்த போதும் வருடாந்த வரவு செலவுத்திட்டம் மூலம் ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ள தொகை ரூபா.2,000,000 ஆக இருந்ததால் செயற்பாட்டுத் திட்டத்தின் செயற்பாடுகளுக்காக போதியளவு ஒதுக்கீடுகள் வழங்கப்படவில்லை. | எதிர்வரும் ஆண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடங்கும் பணிகளை நிறைவேற்றுவதற்காக வரவு செலவுத் திட்டம் மூலம் ஒதுக்கீட்டை மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | சபையால் வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தில் 17 செயற்பாடுகள் காட்டப்பட்ட போதும் மீளாய்வு ஆண்டில் எதுவித செயற்பாட்டையும் நிறைவேற்ற முடியவில்லை. | எதிர்வரும் ஆண்டு செயற்பாட்டுத் திட்டம் தொடர்பான செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சரியாக செயற்பாடுகளைத் திட்டமிடல் வேண்டும். |
| (iv) | சபையால் வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தில் மனிதவள அபிவிருத்திக்காக 04 செயலமர்வுகள் திட்டமிடப்பட்ட போதும் மீளாய்வு ஆண்டின் இறுதியில் ஒரு செயலமர்வேனும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. | இந்த ஆண்டு ஏற்புடைய செயலமர்வுப் பணிகள் திட்டமிடப்பட்டு வருவதாக | திட்டமிட்ட செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் வேண்டும். |
| **(ஆ)** | **திண்மக்கழிவு முகாமைத்துவம்** | | |
| (i) | வெலிகந்த பிரதேச சபையால் சபையின் அதிகார பிரதேசத்தில் நாளாந்தம் சேரும் கழிவுகளை முகாமை செய்வதற்காக முறையான வேலைத் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதுடன் தரம் பிரிக்கப்படாது சேகரிக்கப்படும் கழிவுகள் சேனபுர பிரிவுக்கு உட்பட்ட எத்துகலவின் சுமார் 05 ஏக்கர் காணியில் கொட்டப்பட்டு மூடுதல் தொடர்ந்தும் நடைமுறையில் இருந்து வந்தது. | உள்ளூராட்சி திணைக்களம் மூலம் மற்றும் நீதிமன்ற தண்டப் பணம் மூலம் கழிவுப் பொருள் முகாமைக்கான களஞ்சியம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால் எதிர்காலத்தில் உக்காத கழிவுகளை அந்த களஞ்சியத்தில் சேகரித்தல் மூலம் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் உக்கும் கழிவுப் பொருட்களையும் கொம்போஸ்ட் உரம் தயாரித்து விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | முறையாக கழிவுப் பொருள் முகாமை செய்யப்படல் வேண்டும். |
| (ii) | 2021 ஆம் ஆண்டு நெலும்வெவ பிரதேசத்தில் ரூபா.1,236,921 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட உக்காத கழிவுப் பொருள் விற்பனைக் களஞ்சியம் தொடர்ந்தும் பயன்படுத்தப்படாது உள்ளது. | அப்போதிருந்த மக்கள் பிரதிநிதிகளின் முன்மொழிவுக்கு அமைவாக அக்கட்டடம் நிர்மாணிக்கப்பட்ட போதும் அக்கடடடத்துக்கான நாளாந்த கழிவுப்அபொருள் போக்குவரத்து செலவு அதிகமாக உள்ளதால் கட்டடத்தைப் பயன்படுத்தல் சிக்கலாக உள்ளதென | சொத்துக்களை நிறுவம் போது சாத்தியக் கூற்று ஆய்வு மேற்கொள்ளல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா.254,489 கடன்படுநர் மீதி பல ஆண்டுகளாக தீர்க்கப்படாது நிதிக் கூற்றுக்களில் முன்கொண்டு செல்லப்பட்டு வந்தது. | கடன்படுநர் மீதியை இந்த ஆண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்குகளை சரியாக சமர்ப்பித்தல் வேண்டும். |

### 3.3 பயன்படுத்தப்படாத அல்லது குறைப் பயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி அமைச்சினால் 2021 ஆம் ஆண்டு பொலனறுவை மாட்டத்தில் நடைமுறைப்படுத்திய கிராமிய இலத்திரனியல் நூலக கருத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட 02 நூல் நிலையங்களின் பணிகள் நிறைவடைந்துள்ள போதும் அவற்றை செயற்படுத்துவதற்குத் தேவையான மனித வளம் இல்லாமை காரணமாக அந்த நூல் நிலையங்கள் செயற்படாது காணப்பட்டது. | நூல் நிலையமாக ஆரம்பிப்பதற்குத் தேவையான பணிக்குழாத்தை ஆட்சேர்ப்பதற்கு கௌரவ ஆளுநரின் அனுமதியைப் பெறுவதற்காக அனுப்பப்பட்டுள்ளதாக நெலும்வெவ பாடசாலைக்கு முன்னால் உள்ள காணியில் கிராமிய இலத்திரனியல் நூலகம் பாடசாலைக்கு அண்மையில் அமைந்துள்ளதால் எழுதுகருவிகள் விற்பனை நிலையம் ஒன்றுக்காக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.. |
| (ஆ) | பிபிதெமு பொலனறுவை கருத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வெலிகந்த புதிய சந்தைக் கட்டடத் தொகுதியின் 07 கடை அறைகளுள் 04 கடை அறைகள் ஏற்புடைய நோக்கம் நிறைவேறாது பயனற்று காணப்பட்டது. | வெலிகந்த புதிய சந்தைக் கட்டடத் தொகுதியின் 03 கடை அறைகள் திறக்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய 04 கடை அறைகளை எதிர்காலத்தில் திறப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.. |
| (இ) | ரூபா.1,307,880 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட வெலிகந்த வாராந்த சந்தையின் 04 மீன் கடைகள் 2017 ஆண்டு முதல் பயன்படுத்தப்படாது பயனற்று காணப்பட்டது. | கடைக்கு முன்னால் துணி விற்பனை செய்யும் நடவடிக்கை இடம்பெறுவதால் மீன் கடைகள் செயற்படவில்லை. இரண்டு மீன் கடைகளுக்குப் பதிலாக வேறு வியாபார நடவடிக்கைக்காக கோரும் வியாபாரிகளின் கோரிக்கை பற்றிக் கவனம் | சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.. |

| | | | |
|---|---|---|---|
| | | செலுத்தி வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | |
| (ஈ) | பிபிதெமு பொலனறுவை மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டு ரூபா.2,000,000 செலவில் அபிவிருத்தி செய்து சபைக்கு வழங்கப்பட்ட பிரதேச சபையின் சுற்றுலா விடுதி கணக்கீட்டு திகதி வரை பயன்படுத்தப்படாது காணப்பட்டது. | மதிப்பீட்டு அறிக்கை கிடைத்த பின்னர் நிறுவனம் ஒன்றுக்கு குத்தகை அடிப்படையில் வழங்குவதற் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.. |

## 3.4 ஒப்பந்த நிருவாகத்தின் குறைபாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|
| வெலிகந்த பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் பிரகாரம் 2021/2022 ஆம் ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்களில் ரூபா.33,247,820 பெறுமதியான 13 கருத்திட்டங்களின் பணிகள் பூர்த்தி செய்யப்படாதிருந்தது. | 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அபிவிருத்தி திட்டத்திற்கான முன்மொழிவுகளை வழங்கும் போது இக் கருத்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கி ஒதுக்கீடுகளுக்கு விண்ணப்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | கருத்திட்ட பணிகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.. |

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் அனுமதிக்கப்பட்ட மற்றும் உண்மையான பணியாட்டொகுதி பற்றிய தகவல்கள் பிரகாரம் 13 பணியாட்டொகுதி வெற்றிடங்கள் நிலவியது. | மேல்மட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.. |
| (ஆ) | அரச சேவை இடமாற்றங்களின் பிரகாரம் 05 ஆண்டுகளுக்கு ஒரு தடைவ இடமாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டிய போதும் சபையின் 29 பணியாட்டொகுதி அலுவலர்கள் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் சபையில் கடமை புரிவதாக அவதானிக்கப்பட்டது. | மேல்மட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்த போதும் இதுவரை தீர்வு வழங்கப்படவில்லை என | இடமாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை நடாத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|
| NCP/LG/ACC02/01 மற்றும் 2023-01-02 ஆம் திகதிய கணக்காய்வு வழிகாட்டல் சுற்றறிக்கை பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை ஒவ்வொரு காலாண்டிலும் நடாத்த வேண்டிய போதும் மீளாய்வு ஆண்டில் பிரதேச சபையால் ஒரேயொரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டது. | தற்போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துவதாக | உரியவாறு கணக்காய்வு முகாமைத்துவ குழுக்களை நடாத்துதல் வேண்டும். |